# பாரதியார் பல்கலைக்கழகம், கோவை – 46

## பாடத்திட்டம் – பகுதி 1 – தமிழ்த்தாள் – III

## மூன்றாம் பருவம் – (2007 – 2008 ஆம் கல்வியாண்டில் சேர்வோர்க்குரியது)

## பாடப்பகுதி (செய்யுள், புதினம், இலக்கணம், இலக்கிய வரலாறு, பயிற்சிக் கட்டுரை)

## பொருளடக்கம்

**அலகு – 1 : ஊழ்வினையும் பகுத்தறிவும்**

1. சிலப்பதிகாரம் – கொலைக்களக்காதை (104 வரிகள்)
2. மணிமேகலை – ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை (115 வரிகள்)
3. சீவசிந்தாமணி – கனகமாலையார் இலம்பகம் (38 பாடல்கள்)

**அலகு – 2 : வீரமும் மனித நேயமும்**

1. கம்பராமாயணம் – இந்திரசித்து வதைப்படலம் ( 60 பாடல்கள்)
2. பெரிய புராணம் – மெய்ப்பொருள் நாயனார் புராணம் ( 24 பாடல்கள்)

**அலகு – 3 : நடைமுறைச் சமூகச் சிந்தனை**

புதினம் : கொள்ளைக்காரர்கள், – பொன்னீலன்
நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்துர், சென்னை – 600 098.

**அலகு – 4 : யாப்பும் அணியும்**

1. யாப்பு இலக்கணம், 2. அணி இலக்கணம்

(மொழியமைப்பு) – பாடப்பகுதியை ஒட்டியவை.

(நிலை மண்டில ஆசிரியப்பா, அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், கலி விருத்தம்)

(உவமையணி, தற்குறிப்பேற்றவணி, உயர்வுநவிற்சியணி, இல்பொருள் உவமையணி, சொற்பொருள் பின்வருநிலையணி)

**அலகு – 5**

1. இலக்கிய வரலாறு – பாடத்திட்டத்தைத் தழுவியது

   1. ஐம்பெருங்காப்பியங்கள், 2. கம்பராமாயணம், 3. பெரியபுராணம், 4. புதினத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

2. பயிற்சிக்குரியன

   1. பொதுக்கட்டுரை

# சிலப்பதிகாரம்

## கொலைக்களக்காதை – நிலைமண்டில ஆசிரியப்பா

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று சிலப்பதிகாரம். ‘நெஞ்சை அள்ளும்’ சிலப்பதிகாரம் என்றார் பாரதியார். சிலம்பும் மேகலையும் இரட்டைக்காப்பியங்கள். சிலம்பு காரணமாக எழுந்த வரலாறு காப்பியமாக்கப்பட்டமையால் சிலப்பதிகாரம் எனப் பெயர் பெற்றது. இந்நூலின் ஆசிரியர் இளங்கோவடிகள் ஆவார். சேரமரபில் தோன்றிய இப்பெருந்தகை மனையறத்தையும் அரச போகத்தையும் துறந்தவர். தமிழ்ப்பற்றைத் துறவாதவர்.

சிலப்பதிகாரம் கீழைக்கடலருகே உள்ள புகாரில் தொடங்கி, தமிழகத்தின் இடையே உள்ள மதுரையில் வளர்ந்து மேலைக்கடல் அருகே உள்ள வஞ்சியில் நிறைவுறுகிறது. இயல், இசை, கூத்து என்று முத்தமிழும் விரவியசெந்தமிழ்க்காப்பியம். மூன்று பெருங்காண்டங்களையும் முப்பது காதைகளையும் உடையது. “அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்; உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்; ஊழ்வினை உருத்து வந்தூட்டும்;” என்ற முப்பெருங்கருத்துக்களின் விளக்கமே இந்நூல்.

நமக்குப் பாடப்பகுதியாக அமைந்துள்ள கொலைக்களக்காதை மதுரைக் காண்டத்தில் உள்ளது. காப்பியத்தில் பதினாறாவது காதையாகும். மாதவி கண்ணகியையும் கோவலனையும் புதிய மனையொன்றில் இருத்தித் தன்மகள் ஐயையைக் கண்ணகிக்குத் துணையாக வைத்து அடிசிலாக்குதற்கு வேண்டும் பொருள்களை அளிக்க, கண்ணகி நன்கு சமைத்துக் கணவனை முறைப்படி உண்விக்க, கோவலன் தான் முன் நெறி தவறி நடந்தமைக்கு இரங்கி, நான் நின் சீறடிச் சிலம்பின் ஒன்று கொண்டு போஃ விற்று வருவேன்; மயங்காதிரு எனத் தேற்றிச் சென்ற பகுதி.

### கண்ணகியை மாதரி புதிய மனையில் சேர்த்தல்

அரும்பெறற் பாவையை அடைக்கலம் பெற்ற
இரும்பே ருவகையின் இடைக்குல மடந்தை
அளைவிலை யுணவின் ஆஃச்சியர் தம்மொடு
மிளைசூழ் கோவலர் இருக்கை யன்றிப்
பூவ லூட்டிய புனைமாண் பந்தர்க்
காவற் சிற்றிற் கடிமனைப் படுத்துச்

### ஐயை தோழியாதல்

செறிவளை யாஃச்சியர் சிலருடன் கூடி
நறுமலர்க் கோதையை நாணீ ராட்டிக்

கூடல் மகளிர் கோலங் கொள்ளும்
ஆடகப் பைம்பூ ணருவிலை யழிப்பச்
செஃயாக் கோலமொடு வந்தீர்க் கென்மகள்
ஐயை காணீர் அடித்தொழி லாட்டி
பொன்னிற் பொதிந்தேன் புனைபூங்  கோதை
என்னுடன் நங்கையீங் கிருக்கெனத் தொழுது
மாதவத் தாட்டி வழித்துயர் நீக்கி
ஏதமில்லா இடந்தலைப் படுத்தினள்
நோதக வுண்டோ நும்மக னார்க்கினிச்
சாவக நோன்பிக ளடிக ளாதலின்
நாத்தூண் நங்கையொடு நாள்வழிப் படூஉம்
அடிசிலாக்குதற் கமைந்தநற் கலங்கள்
நெடியா தளிமின் நீரெனக் கூற

## இடைக்குல மடந்தையர் சமைக்கப் பொருள் தரல்

இடைக்குல மடந்தையர் இயல்பிற் குன்றா
மடைக்கலந் தன்னொடு மாண்புடை மரபிற்
கோளிப் பாகற் கொழுங்கனித் திரள்காஃ
வாள்வரிக் கொடுங்காஃ, மாதுளம் பசுங்காஃ
மாவின் கனியொடு வாழைத்தீங்கனி
சாலி யரிசி தம்பாற் பயனொடு
கோல்வளை மாதே கொள்கெனக் கொடுப்ப

## உணவு சமைத்தல்

மெல்விரல் சிவப்பப் பல்வேறு பசுங்காஃ
கொடுவாஃக் குயத்து விடுவாஃ செஃயத்
திருமுகம் வியர்த்தது செங்கண் சேந்தன
கரிபுற அட்டில் கண்டனள் பெயர
வையெரி மூட்டி ஐயை தன்னொடு

கையறி மடைமையில், காதலற் காக்கித்
தாலப் புல்லின் வால்வெண் தோட்டுக்

கைவன் மகடுஉக் கவின்பெறப் புனைந்த
செஃவினைத் தவிசில் செல்வன் இருந்தபின்
கடிமல ரங்கையிற் காதல னடிநீர்
சுடுமண் மண்டையில் தொழுதனள் மாற்றி
மண்ணக மடந்தையை மயக்கொழிப் பனள்போல்

தண்ணீர் தெளித்துத் தன்கையால் தடவிக்
குமரி வாழையின் குருத்தகம் விரித்தீங்கு
அமுத முண்க அடிக ளீங்கென

## கோவலன் உணவுண்ணல்

அரசர் பின்னோர்க் கருமறை மருங்கின்
உரிய வெல்லாம் ஒருமுறை கழித்தாங்கு

ஆயர் பாடியின் அசோதைபெற் றெடுத்த

பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ
நல்லமு துண்ணும் நம்பி யீங்குப்
பல்வளைத் தோளியும் பண்டுநங் குலத்துத்
தொழுனை யாற்றினுள் தூமணி வண்ணனை

விழுமந் தீர்த்த விளக்குக் கொல்லென
ஐயையும் தவ்வையும் விம்மிதம் எஃதிக்
கண்கொளா நமக்கிவர் காட்சி யீங்கென

## கோவலன் உள்ளம்

உண்டினி திருந்த உயர்பே ராளற்கு
அம்மென் திரையலோ டடைக்கா யீத்த

மையீ ரோதியை வருகெனப் பொருந்திக்
கல்லதர் அத்தம் கடக்க யாவதும்
வல்லுந கொல்லோ மடந்தைமெல் லடியென

வெம்முனை யருஞ்சுரம் போந்ததற் கிரங்கி
எம்முது குரவர் என்னுற் றனர்கொல்

மாயங்கொல்லோ வல்வினை கொல்லோ
யானுளங் கலங்கி யாவதும் அறியேன்
வருமொழி யாளரொடு வம்பப் பரத்தரொடு
குறுமொழிக் கோட்டி நெடுநகை புக்குப்
பொச்சாப் புண்டு பொருளுரை யாளர்

நச்சுக்கொன் றேற்கும் நன்னெறி யுண்டோ
இருமுது குரவ ரேவலும் பிழைத்தேன்
சிறுமுதுக் குறைவிக்கும் சிறுமையுஞ் செஃதேன்
வழுவெனும் பாரேன் மாநகர் மருங்கீண்டு
எழுகென எழுந்தாஃ என்செஃ தனையென

### கண்ணகி மறுமொழி

அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை நும்
பெருமக டன்னொடும் பெரும்பெயர்த் தலைத்தாள்
மன்பெருஞ் சிறப்பின் மாநிதிக் கிழவன்

முந்தை நில்லா முனிவிகந் தனா
அன்புளஞ் சிறந்தாங் கருண்மொழி யளைஇ
எற்பாராட்ட யானகத் தொளித்த
நோயும் துன்பமும் நொடிவது போலுமென்
வாயல் முறுவற்கவர் உள்ளகம் வருந்தப்

போற்றா வொழுக்கம் புரிந்தீர் யாவதும்
மாற்றா உள்ள வாழ்க்கையே னாதலின்
ஏற்றெழுந் தனன்யான் என்றவள் கூறக்

### கண்ணகியைப் போற்றல்

குடிமுதல் சுற்றமும் குற்றிளை யோரும்
அடியோர் பாங்கும் ஆயமும் நீங்கி

நாணமும் மடனும் நல்லோ ரேத்தும்
பேணிய கற்பும் பெருந்துணை யாக
என்னொடு போந்தீங் கென்றுயர் களைந்த
பொன்னே கொடியே புனைபூங் கோதாஃ
நாணின் பாவாஃ நீணில விளக்கே

கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி
சீறடிச் சிலிம்பி னொன்றுகொண் டியான்போஃ
மாறி வருவன் மயங்கா தொழிகெனக்
கருங்கயல் நெடுங்கட் காதலி தன்னை
ஒருங்குடன் தழீஇ உழையோ ரில்லா

ஒருதனி கண்டுதன் உள்ளகம் வெதும்பி
வருபனி கரந்த கண்ண னாகிப்

### இல்லம் நீங்கி மறுகு செல்லல்

பல்லான் கோவல ரில்லம் நீங்கி
வல்லா நடையின் மறுகிற் செல்வோன்
இமிலே றெதிர்ந்த திழுக்கென அறியான்

தன்குலம் அறியுந் தகுதியன்றாதலின்
தாதெரு மன்றந் தானுடன் கழிந்து
மாதர் வீதி மறுகிடை நடந்து
பீடிகைத் தெருவிற் பெயர்வோன்

# மணிமேகலை

## ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை –நிலைமண்டில ஆசிரியப்பா

மணிமேகலை இரட்டைக் காப்பியங்களுள் ஒன்று. காப்பியத் தலைவி பெயரால் பெயர் பெற்றது. கோவலன் மாதவி ஆகியவர்களுக்குப் பிறந்த மகள் மணிமேகலையின் வரலாறு கூறுவதால் 'மணிமேகலை' எனறும் அவள் துறவு பற்றிக் கூறுவதால் 'மணிமேகலை துறவு' என்றும் அழைக்கப்படுகிறது. இதன் ஆசிரியர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்.

இது பௌத்த சமயத்தைச் சார்ந்தது. சமயத்தைப் பரப்பும் நோக்கத்தோடு தோன்றிய முதல்நூல் மணிமேகலை. பிற்காலத்தே சமயக்காப்பியங்கள் தோன்றுவதற்கு வித்திட்டது இந்நூல். இலக்கியச் சுவையைவிடப் பௌத்த சமய விளக்கமே காப்பியத்தில் மேலோங்கி உள்ளது அகவற்பாவால் அமைந்தது. எளிய நடையில் கதை சொலலும் தன்மையும் பௌத்த சமய உண்மைகளையும் நீதிகளையும் தெளிவாக எடுத்துரைக்கும் இயல்புமே இநத்க காப்பியத்தின் சிறப்பியல்புகள்.

சிலம்பிற்குப் பின் தோன்றிய இக்காப்பியம் சிலம்பினைப் போலவே முப்பது காதைகளை உடையது. ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை பதின்முன்றாவது காதையாகும். இதில் ஆபுத்திரனின் வரலாறு கூறப்படுகிறது.

### சாலி குழந்தையைத் தோட்டத்திலிடல்

மாபெரும் பாத்திர மடக்கொடிக் கருளிய
ஆபுத் திரன்றிற மணியிழை கேளாஃ
வார ணாசியோர் மறையோம் பாளன்
ஆரண வுவாத்தி யபஞ்சிக னென்போன்
பார்ப்பனி சாலி காப்புக்கடை கழிந்து

கொண்டோற் பிழைத்த தண்ட மஞ்சித்.
தென்றிசைக் குமாரி யாடிய வருவோள்
சூன்முதிர் பருவத்துத் துஞ்சிரு ளியனிடை
ஈன்ற குழவிக் கிரங்கா ளாகித்
தோன்றாத் துடவையி னிட்டன ணீங்கத்

## குழந்தை வளர்ந்த வரலாறு

தாயிறூவாக் குழவித்துயர் கேட்டோர்
ஆவந் தணைந்தாங் கதன்றுயர் தீர
நாவா னக்கி நன்பா லூட்டிப்
போகா தெழுநாட் புறங்காத் தோம்ப
வயனங் கோட்டிலோர் மறையோம் பாளன்

இயவிடை வருவோ னிளம்பூதி யென்போன்
குழவி யேங்கிய கூஉக்குரல் கேட்டுக்
கழுமிய துன்பமொடு கண்ணீ ருகுத்தாங்
காமக னல்ல னென்மக னென்றே
காதலி தன்னொடு கைதொழு தெடுத்து

நம்பி பிறந்தான் பொலிகநங் கிளையெனத்
தம்பதிப் பெயர்ந்து தமரொடுங் கூடி
மார்பிடை முந்நூல் வனையா முன்னர்
நாவிடை நன்னூ னன்கன நவிற்றி
ஓத்துடை யந்தணர்க் கொப்பவை யெல்லாம்

நாத்தொலை வின்றி நன்கன மறிந்தபின்

## அந்தணன் பசுவின் துயரம் கண்டு இரவில் கொணடு செலல்

அப்பதி தன்னுளோ ரந்தணன் மனைவயிற்
புக்கோ னாங்குப் புலைசூழ் வேள்வியிற்
கு.உத்தொடை மாலை கோட்டிடைச் சுற்றி
வெருஉவப்பகை யஞ்சி வெஃதுயிர்த்துப் புலம்பிக்

கொலை நவில் வேட்டுவர் கொடுமர மஞ்சி

வலையிடைப் பட்ட மானே போன்றாங்
கஞ்சிநின் தழைக்கு மாத்துயர் கண்டு
நெஞ்சுநடுக் குற்று நெடு.கணீ ருகுத்துக்
கள்ள வினையிற் கடுந்துயர் பாழ்பட

நள்ளிருட் கொண்டு நடக்குவ னென்னும்
உள்ளங் கரந்தாங் கொருபுடை யொதுங்கி
அல்லிடை யாக்கொண் டப்பதி யகன்றோன்
கல்லத ரத்தங் கடவா நின்றுழி

## அந்தணர்கள் கண்டு நிகழ்ந்தது

அடர்க்குறு மாக்களொ டந்தண ரெல்லாம்
கடத்திடை யாவொடு கையகப் படுத்தி
ஆகொண் டிந்த வாரிடைக் கழிய
நீமக னல்லாஃ நிகழ்ந்ததை யுரையாஃ
புலைச்சிறு மகனே போக்கப் படுதியென்
றலைக்கோ லதனா லறைந்தனர் கேட்ப
ஆட்டிநின்றலைக்கு மந்தண ருவாத்தியைக்
கோட்டினிற் குத்திக் குடர்புஃத் துறுத்துக்
காட்டிடை நல்லாக் கதழ்ந்துகிளர்ந் தோட

## ஆபுத்திரன் அந்தணர்கட்குக் கூறியவை

ஆபுத் திரன்றா னாங்கவர்க் குரைப்போன்
நோவன செஃயன்மி னொடிவன கேண்மின்
விடுநில மருங்கிற் படுபுல்லார்ந்து
நெடுநில மருங்கின் மக்கட் கெல்லாம்
பிறந்தநாட் டொட்டுஞ் சிறந்ததன் றீம்பால்
அறந்தரு நெஞ்சோ டருள்சுரந் தூட்டும்
இதனொடு வந்த செற்ற மென்னை
முதுமறை யந்தணிர் முன்னிய துரைமோ

## அந்தணர் இகழ்ந்து கூறலும் ஆபுத்திரன் பதிலும்

பொன்னணி நேமி வலங்கொள்சக் கரக்கை
மன்னுயிர் முதல்வன் மகமெக் கருளிய
அருமறை நன்னூ லறியா திகழ்ந்தனை
தெருமர லுள்ளத்துச் சிறியை நீயவ்

வாமக னாதற் கொத்தனை யறியா
நீமக னல்லாஃ கேளென விகழ்தலும்
ஆன்மக னசலன் மான்மகன் சிருங்கி
புலிமகன் விரிஞ்சி புரையோர் போற்றும்
நரிமக னல்லனோ கேச கம்பளன்

ஈங்கிவர் நுங்குலத் திருடி கணங்களென்
றோங்குயர் பெருஞ்சிறப் புரைத்தலு முண்டால்
ஆவொடு வந்த வழிகுல முண்டோ
நான்மறை மாக்கா ணன்னூ லகத்தென
ஆங்கவர் தம்முளோ ரந்தண னுரைக்கும்

## ஆபுத்திரன் வரலாறு

ஈங்கிவன் றன்பிறப் பியானறி குவனென
நடவை வருத்தமொடு நல்கூர் மேனியள்
வடமொழி யாட்டி மறைமுறை யெஃதிக்
குமரி பாதங் கொள்கையின் வணங்கித்
தமரிற் றீர்ந்த சாலியென் போடனை

## சாலி கூறியன

யாது நின்னூ ரீங்கென் வரவென
மாமறை யாட்டி வருதிற முரைக்கும்
வார ணாசியோர் மாமறை முதல்வன்
ஆரண வுவாத்தி யரும்பெறன் மனைவியான்
பார்ப்பார்க் கொவ்வாப் பண்பி னொழுகிக்

காப்புக்கடை கழிந்து கணவனை யிழந்தேன்
எறிபய முடைமையி னிரியன் மாக்களொடு
தெற்கட் குமரி யாடிய வருவேன்
பெற்றோர்ச் செழியன் கொற்கையம் பே.ர்க்
காதவங் கடந்து கோவல ரிருக்கையின்

ஈன்ற குழவிக் கிரங்கே னாகித்
தோன்றாத் துடவையி னிட்டனன் போந்தேன்
செல்கதி யுண்டோ தீவினை யேற்கென்

றல்லலுற் றழுத வவண்மக னீங்கிவன்
சொல்லுத றேற்றேன் சொற்பய மின்மையிற்

புல்ல லோம்பன்மின் புலைமக னிவனென

### ஆபுத்திரன் மறையவர்க்குக் கூறியவை

ஆபுத் திரன்பின் பமர்நகை செஃது
மாமறை மாக்கள் வருங்குலங் கேண்மோ
முதுமறை முதல்வன் முன்னர்த் தோன்றிய
கடவுட் கணிகை காதலஞ் சிறுவர்

அருமறை முதல்வ ரந்தண ரிருவரும்
புரிநூன் மார்பீர் பொஃயுரை யாமோ
சாலிக்கு ண்டோ தவறென வுரைத்து
நான்மறை மாக்களை நகுவன னிற்ப

### ஆபுத்திரன் அம்பலப் பீடிகை அடைதலும் உணவூட்டலும்

ஓத லந்தணர்க் கொவ்வா னென்றே

நாதை பூதியுந் தன்மனை கடிதர
ஆகவர் கள்வறென்என் றந்தண ருறைதரும்
கிராம மெங்கணுங் கடிஞையிற் கல்லிட
மிக்க செல்வத்து விளங்கியோர் வாழும்
தக்கண மதுரை தான்சென் றெஃதிச்

சிந்தா விளக்கின் செழுங்கலை நியமத்
தந்தின் முன்றி லம்பலப் பீடிகைத்
தங்கினன் வதிந்தத் தக்கணப் பே.ர்
ஐயக் கடிஞை கையி னேந்தி
மையறு சிறப்பின் மனைதொறு மறுகிக்

காணார் கேளார் கான்முடப பட்டோர்
பேணுந ரில்லோர் பிணிநடுக் குற்றோர்
யாவரும் வருகவென் றிசைத்துட னூட்டி
உண்டொழி மிச்சியூண் டோடுதலை மடுத்துக்
கண்படை கொள்ளுங் காவலன் றானென்

# சீவகசிந்தாமணி

## கனகமாலையார் இலம்பகம்

இந்நூல் செந்தமிழ் மொழியின் சிறந்து விளங்கும் ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாகும். சிந்தாமணி என்பது இதற்குத் தன்மையால் வந்த பெயர் என்பர் நன்னூல் உரையாசிரியர். சிந்தாமணி என்பது தேவலோகத்துக்கல் ஆகும். இது நினைத்ததை எல்லாம் கொடுக்கக் கூடியது. சிந்தித்த பொருள்களையெல்லாம் தரவல்ல சிந்தாமணி போல நினைத்த கருத்துக்களையெல்லாம் கொடுக்கக்கூடியது இந்நூல் என்பர்.

சீவகன் பிறந்தவுடன் அவள் தாஃ விசயை 'சிந்தாமணியே' என்றதாலும் அக்காட்டில் அவள் தும்மிய போது ஒரு குரல் 'சீவ' என்றதாலு:ம 'சீவக சிந்தாமணி' என்று அவனுக்குப் பெயராயிற்று.

இந்நூலை இயற்றியவர் திருத்தக்க தேவர். சீவகசிந்தாமணிக்கு முதல் நூல் இன்னதென்று விளங்கவில்லை. வடமொழியில் ஷத்திர சூடாமணி, கத்திய சிந்தாமணி, ஜீவந்தர நாடகம், ஜீவந்தரசம்பு என்னும் நூல்கள் சீவகன் சரித்திரம் கூறுகின்றன.

சிந்தாமணியில் நாமகள் இலம்பகம் முதல் முக்தி இலம்பகம் ஈறாகப் பதின்மூன்று இலம்பகங்கள் உள்ளன. இங்கே பாடமாக உள்ள பகுதி சீவக சிந்தாமணியின் ஏழாவது இலம்பகமாகிய கனகமாலையார் இலம்பகத்திலுள்ளது. சீவகனுடைய தம்பியரும் தோழரும் அவனுடைய தாயைக் கண்டு அவளுக்குச் சீவகனது நிலையை உரைத்தலும் அவளைக் கண்டு பிடித்தலும் இப்பகுதியில் கூறப்படும்.

### சீவனின் தோழர் விசயையைக் காணுதல்

வண்டுதுயில் கொண்டுகுயி லாலிமயி லகவி
விண்டுமது விட்டுவிரி போதுபல பொதுளிக்
கொண்டுதளிர் வேஃந்துசினை தாழ்ந்துநனை யார்ந்தொன்று
உண்டுபொழி லிமையவர்க ளுலகமுறு வதுவே (1)

காவிகழு நீர்வேளை யாம்பல்கடிக் கமலம்
தூவிமட நாரை துணை யன்னம்பயின் முதுமீன்
மேவியுறை வண்டினொடு மல்கிவிழை தகைய
வாவியொடு காவினிடை மாந்தர்பதி கொண்டார் (2)

ஐயருறை பள்ளியிட மாண்டழகர் காணச்
செஃகழலர் தாரரவ ரெங்குந்திரி கின்றார்

கொஃதகைய பூம்பொதும்பர்க் குளிருமரப் பலகைச்
செஃயவளிற் சிறிதுமிகை சேயவளைக் கண்டார் (3)

மாகொடு மிடைந்துமணி நூற்றனைய வைம்பால்
பூசுதலு மின்றிப் பிணி கொண்டுபுறந் தாழ
வாசமலர் மறைந்தவழி வாமனடிக் கேற்றித்
தோசமறத் துதிகண்மனத் தோதித்தொழு திருந்தாள் (4)

வரையுடுத்த பள்ளியிட மாகவதின் மேயோள்
விரை யுடுத்த போதுறையும் வேனெடுங்க ணாள்கொல்
உரையுடுத்த நாவுறையு மொண்ணுதல்கொ லன்றித்
திரையுடுத்த தேமொழிகொ லென்றுதெரி கல்லார் (5)

மங்கல மடிந்ததிரு மாமகளை யொப்பீர்
இங்குவர வென்னைகுலம் யாதடிகட் கென்ன
எங்குலமு மெம்வரவும் வேண்டினெனி தன்றே
நுங்குவமு நும்வரவும் நீருரைமி னென்றாள் (6)

**சீவகனின் தோழனான தேவதத்தன் அவர்களின் வரலாறு கூறுதல்**

மோட்டுமுது நீர்மலங்கு மொஃத்த விளவாளை
பூட்டுசிலை யிறவினொடு பொருதுதுயின் மடியும்
ஈட்டமுடை யவர்களுறை யுராசபுர மென்னும்
நாட்டமுடை நகரமெம தாகுமுறை பதியே (7)

பொன்னுடைய மார்பிற்புகழ் மந்திரி பொலந்தார்த்
தன்னுடைய நுண்ணுணர்விற் சாகரற்குத் தக்காள்
கொன்னெடிய வாட்கட்குரு தத்தைசீ தத்தன்
மன்னடுங்க வீங்குதிர டோண்மடங்க லன்னான் (8)

அளப்பரிய நான்மறையி னானசல னென்பான்
திளைக்குந்திரு வொப்புடைய திலோத்தமைதன் சிறுவன்
விளைத்திரும்பு மேஃத்தொழிநத மிச்சில்வரை மார்பன்
இளைப்பலிவன் றேசுரைப்பிற் புத்திசேனிவ் விருந்தான் (9)

செட்டிதன பாலன்மனை யாள்சினைவு வாட்கட்
பட்டநுதன் மின்னினகு பவித்திரைக்குத் தோன்றி

மட்டுமலர் மார்பின்மத யானையெயி றுழுதாங்கு
இட்டகுறி தார்திவளப் பதுமுகனிவ் விருந்தோன் (10)

பொன்னகருள் வேந்தன்பெய ராற்பொறியும் பெற்றான்
வின்மரிய தோள்விசய தத்தனுயிர்க் கவசம்
பின்னரிய கற்பினவள் பிரீதிமதி காதல்
தன்மகனென் யாழைக டேவதத்த னென்பேன் (11)

எங்கள்வினை யாலிறைவன் வீடியவுஞ் ஞான்றே
எங்களுயிர் நம்பியொடு யாங்கள்பிறந் தேமா
எங்கடமர் நம்பிக்கிவர் தோழரென வீந்தார்
எங்கழிலென் ஞாயிறென வின்னணம் வளர்ந்தேம் (12)

யாண்டுநிறைந் தேகியபி னந்தனவற் கிளையார்
மாண்டகுணத் தார்நபில விபுலரொடு மன்னும்
ஈண்டவளர்ந் தேந்தவிசி னுச்சிமிசை யெஃதித்
தீண்டரிய வெம்மையொடு திக்கயங்கள் எனவே (13)

விற்றொழிலும் வாட்டொழிலும் வீணைபொரு தொழிலும்
மற்றொழிலும் தேர்த்தொழிலும் வாரணத்தின் தொழிலும்
நறொழில வாசியொடு நன்கலைக ணீந்திக்
கற்றனங்கள் யாழுமுடன் கற்பனக ளெல்லாம் (14)

வெஞ்சிலையின் வேடர்தொறு மீட்டுவிசும் பேரும்
விஞ்சையரை யன்மகளை வீணைபொரு தெஃதிக்
குஞ்சரமும் வென்றுகுண மாலைநல னுண்ட
நம்பியவ னாமமெவ னென்னினிது வாமே (15)

கந்துக்கட னென்றநகர்க் காதிமுது நாஃகன்
முந்திப் பெறப் பட்டமகன் மூரிச்சிலைத் தடக்கைச்
சிந்திப்பவ ரவலமறு சீவகனென் றோழன்
அந்திலொரு நாளவனை யரசனொரு தவற்றால் (16)

தொடிகடவழ் வீங்குதிர டோளிறுக யாத்துக்
கடிகடவழ் குழன்மகளிர் கசிந்துமனங் கரியக்

கொடிகடறவ் மாடநகர்க் கொல்லவென மாழ்கி
இடிகடவழ்ந் திட்டபட நாகமென வீழ்ந்தாள்          (உவமையணி)          (17)

**சீவகன் வரலாற்றினைக் கேட்ட விசயை கொண்ட வருத்தம்**

மாதவப் பெருமை வண்ண மாநகர் நம்பிக் குற்ற
ஏதத்தைக் கேட்ட லோடு மிருகணும் பிறழ்ந்து மாழ்கிக்
காதற்றம் மகனுக் குற்ற நவையெனக் கலங்கி வீழ்ந்தார்
ஆதலா னங்கை யாரே யருள்பெரி துடைய ரென்றார்          (18)

மாழ்குபு மயங்கி வீழ்ந்த மாபெருந் தேவி தன்னை
ஆழ்துய ரவித்தற் கொத்த வரும்பெறல் யோக நாடிக்
காழ்பரிந் தரைத்த சாந்தின் களிதரு நீரிற் றேற்ற
யாழ்புரை கிளவி யாற்றாண் மயங்கிவீழ்ந் தரற்று கின்றாள்          (19)

கைம்மாண் கடற்படையுட் காவலனை யாண்டொழியப்
பொஃம்மா மயிலூர்ந்து போகிப் புறங்காட்டுள்
விம்மாந்தி யான்வீழ வீழ்ந்தேன் றுணையாகி
எம்மானே தோன்றினா யென்னை யொளித்தியோ          (20)

கையா ரிலங்கெஃகிற் கந்துக் கடன்கெடுபோஃ
மொஃயா ருவகையனாஃ முற்றிழைக்குத் தான் கொடுப்ப
நையாள் வளர்த்த சுநந்தை நவையுறவென்
ஐயாவென் னையாவென் னையா வகன்றனையே          (21)

மின்னிரைத்த பைம்பூண் விளங்கிலை வேல்வேந்தன்
முன்னுரைத்த முன்று கனவும் புணையாக
என்னுயிரைத் தாங்கி யிருந்தேன் வலியாகாது
என்னரசே யென்பூசல் கேளா திறந்தனையே          (22)

கோவமா வாகிக் குடியோம்பி நின்குடைக்கீழ்ப்
பாவமே செஃதேன் பரிவெலா நீங்கினாற்
போவம்மா வென்றுரைப்பப் போவேன்முன் போயினாஃ
ஆவம்மா வம்மாவென் னனம்மா வகனன்றனையே          (23)

கோமான் மகனே குருகுலத்தார் போரேறே
ஏமாங் கதத்தா ரிறைவாவென் னின்னுயிரே

காமா கடலுட் கலங்கவிழ்த்தேன் கண்ணுணீர்
பூமாண் புனைதாராஃ நோக்காது போதியோ (24)

கந்தார் களியானைக் காவலனார் கான்முளையை
வந்தார்வாஃத் தீதின்மை கேட்டு மறைந்திருந்து
நொந்தேன் பலகாலு நோயோடே வீகின்றேன்
அந்தோ வறனேமற் றாற்றேனா லாற்றேனால் (25)

முன்னொருகா லென்மகனைக் கண்டேனென் கண்குளிரப்
பின்னொருகாற் காணப் பிழைத்ததென் றேவிர்காள்
என்னொப்பார் பெண்மகளி ரிவ்வுலகிற் றோன்றற்கென்று
அன்னப் பெடைநடையா ளாஃமயில்போல் வீழ்ந்தனளே (26)

### விசயை சீவகனின் தாஃ என்பதை அறிந்து தோழர் மகிழ்தல்

புண்மல்கு மத்தகத்த போர்வேழம் பொற்பழித்த
மண்மல்கு தாரான் பெருமாட்டி வாஃமொழிகேட்டு
உண்மல்கு நெஞ்சினரா யொஃயெனவே வெஃதுயிராக்
கண்மல்கு நீரார் முகமுகங்க ணோக்கினரே (27)

கண்டீர் கருவம் விளைந்தவா றென்றாராஃ
வண்டாரார் வண்கடக மின்னத்தங் கைம்மறித்துக்
கொண்டாங் கடல்வேலி கீழ்மகனைக் கூற்றமாஃ
உண்டா முயிரென் றுவப்பெழுந் தாடினரே (28)

### தோழர் விசையையைத் தேற்றுதல்

வீழ்ந்து மயில்போல் விசயை கிடந்தாளைத்
தாழ்ந்து பலதட்பந் தாஞ்செஃய வேல்பெற்றுப்
போழ்ந்தகன்ற கண்ணாள் புலம்பா வெழுந்திருப்பச்
சூழ்ந்து தொழுதிறைஞ்சிச் சொன்னா ரவன்றிறமே (29)

கொலைக்களங் குறுகவூங் கொண்டொர் தெஃவதம்
நிலைக்கள மிதுவென நீக்க நீங்கினான்
இலக்கண மடப்பிடி யியைந்தொர் போதகம்
மலைக்கணத் திடை மகிழ்ந் தனைய மைந்தனே (30)

பூவிடைத் தெரியலான் போர்வை நீத்தினிக்
கோவுடைப் பெருமக னாதல் கொண்டனம்
சேவடி சேர்ந்தனந் தொழுது சென்றென
மாவடு நோக்கியுண் மகிழ்ந்து கூறினாள் (31)

## விசயையின் வேண்டுகோள்

தரணி காவலன் சச்சந்த னென்பவன்
பரணி நாட்பிறந் தான்பகை யாவையும்
அரணி லானென்கட் டங்கிய வன்பினால்
இரணி யன்பட்ட தெம்மிறை யெஃதினான் (32)

விசயை யென்றுல கோடிய வீறிலேன்
பசையி னாற்றுஞ்சி யான்பட்ட தீதெலாம்
இசைய நம்பிக் கெடுத்துரைத் தென்னுழை
அசைவின் றையனைத் தம்மினெனச் சொன்னாள் (33)

கோதை வேனம்பிக் கல்லதை யிப்பொருள்
யாதுங் கூறன்மின் யாரையுந் தேறன்மின்
ஏத மின்ன வின்னை மெஃதலாற
பேதை யாரொடும் பெண்ணொடும் பேசன்மின் (34)

பகைவ ருள்ளமும் பாம்பின் படர்ச்சியும்
வகைகொண் மேகலை மங்கையர் நெஞ்சமும்
மிகைசென் மேகத்து மின்னுஞ் செந் நில்லலா
புகைசெஃ வேலினீர் போற்றுபு சென்மினே (35)

## தோழர் சீவகனைத் தேடிக் கொணர்வதாக உறுதி கூறல்

வணக்கருஞ் சிலையி னானை யொருமதி யெல்லை நாளுட்
குணத்தொடு மலிந்த பாதங் குறுகயாங் கொணர்ந்த பின்றைப்
பணித்ததே செஃது பற்றார் பகைமுத லடர்த்து மென்றார்
மணிக்கொடி மாசுண் டன்னாண் மற்றதே துணிமி னென்றாள் (36)

## தோழர்களின் செலவு

பொறிதவ நெருங்க நோற்றுப் புகரற நிறைந்த கொள்கைச்
செறிதவ விசயை பாதஞ் சென்னியின் வணங்கி மீண்டு
வெறிகமழ் சோலை நண்ணி வேண்டிய வடிசில் கைதொட்டு
எறிபடை யெழுக வென்றார் வளையெழுந் தார்த்த வன்றே (37)

சாந்தினமேற் றொடுத்த தீந்தேன் திரணமதிக் கோடு போழப்
போந்துமட் டருவி வீழும் பொன்னெடுங் கன்று மந்தண்
ஏந்தபூங் காவு சூழ்ந்த விரும்புனல் யாறு நீந்தி
மாந்தரே மலிந்த நாடு மடுத்துடன் சென்ற தன்றே (38)

1 முதல் 17 முடிய – கலிவிருத்தம்

18, 19 – அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

20 மதல் 35 முடிய – கலிவிருத்தம்

36 – 38 – அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

# கம்பராமாயணம்

கம்பரால் இயற்றப்பட்டதால் கம்பராமாயணம் எனப்படும். கம்பர் தம் இராமாயணத்திற்கு இட்டபெயர் 'இராமாவதாரம்' என்பது. கம்பராமாயணம் உலகக் காப்பியங்களுள் ஒன்றாகத் திகழும் தகுதியினை உடையதாகும். ஆதிகாவியம் என்று அழைக்கப்படும் வடமொழி வால்மீகி ராமாயணத்தை முதனூலாகக் கொண்டு நம் காப்பியத்தை ஆக்கியுள்ளார் கம்பர். தமிழ்ப் பண்பாட்டிற்கும் மரபிற்கும் ஏற்ற வகையில் வால்மீகியின் கதைப் போக்கினைப் பல இடங்களில் மாற்றி அமைத்துள்ளார்.

கம்பர் பற்றிய வரலாறு தெளிவாகத் தெரியவில்லை. அவர் வாழ்ந்த காலத்தையும் முடிவு செஃய இயலவில்லை. அவரைப் பற்றி வழங்கும் கதைகளும் ஆதாரமற்றவையாகும். எனினும் கம்பர் பிற்காலச் சோழர் காலத்தவர், சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பட்டவர் என்னும் செஃதிகள் எல்லோருக்கும் ஏற்புடையனவே. கம்பருடைய காலத்தை ஒன்பதாம் நூற்றாண்டு எனச்சிலரும், பன்னிரண்டாம் நூற்றாண்டு எனப்பலரும் கூறுவர் என்பார் டாக்டர் மு.வ. அவர்கள்.

கம்பராமாயணம் வெறும் மொழிபெயர்ப்பு நூலன்று; சங்க இலக்கியம், ஆழ்வார் பாடல்கள் ஆகியவை கூறும் கருத்துக்களையும் தமிழ்ப்பண்பாட்டுக் கூறுகளையும் உள்ளடக்கியது. கோசலம் என்று அவர் கூறுவது சோழ நாட்டையே; அயோத்தி மக்கள் தமிழர்களே; கங்கையாறு காவிரியாகவே ஓடுகிறது ? அவர் கூறும் அரசியலும், அறங்களும், சமுதாயக் கோட்பாடுகளும், பழந்தமிழர் கண்ட நெறிகளே. 'ஈவாரும் இரப்பாரும் இல்லாத உலகம்' எனத் தமிழகம் மாற வேண்டும் எனும் ஆவல் கம்பராயணத்தில் எதிரொலிக்கிறது. எல்லாரையும் ஒன்றாகக் காணும் காட்சி தமிழ்ச் சமயம் பெற்ற தெளிவு. அதனடிப்படையில் வேடனையும், குரங்கினையும், அரக்கனையும் மானுடனுக்குத் தம்பியராக்குவது கம்பனின் சிறப்பு. இப்படி அரிய செஃதிகள் கொண்டது கம்பராமாயணம்.

வடமொழி ராமாயணத்தில் ஏழு காண்டங்கள் உள; கம்பர் ஆறு காண்டங்களை மட்டுமே பாடியுள்ளார். அவை பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்யகாண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தரகாண்டம், யுத்தகாண்டம் என்பனவாகும். ஏழாம் காண்டமாகிய உத்தர காண்டத்தை ஒட்டக்கூத்தர் பாடினார்.

கீழ்வரும் பாடப்பகுதி யுத்த காண்டத்தில் அமைந்துள்ளது. இலக்குவன் இந்திரசித்தனைக் கொன்ற நிகழ்ச்சியைக் கூறும் பகுதியாதலின் இப்பகுதி இந்திரசித்து வதைப்படலம் எனப்பெயர் பெறுகின்றது.

இப்படலத்தில் இந்திரசித்தும் இராவணனும் பேசும் உரையாடல் தனிச்சிறப்புடையது. இந்திரசித்தனுக்கு இராவணன் மேல் இருக்கும் அன்பையும், இராவணனுக்கு மானவுணர்ச்சி மேல் இருக்கும் பற்றையும் இங்குத் தெளிவாகக் காணலாம்.

## இந்திரசித்து வதைப்படலாம்

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

### இந்திரசித்து இராவணனை அடைதல்

விண்ணிடைக் கரந்தா னென்பார் வஞ்சனை விளைக்கு மென்பார்
கண்ணிடைக் கலங்கி நோக்கி யையுற வுழங்குங் காலை
புண்ணுடை யாக்கைச் செந்நீரிழிதரப் புக்குநின்ற
எண்ணிடை மகனை நோக்கி யிராவண னினைய சொன்னான் (1)

### இராவணன் இந்திரசித்தனை வினவுதல்

தொடங்கிய வேள்வி முற்றுப் பெற்றிலாத் தொழில்நின் றோண்மேல்
அடங்கிய வம்பே யென்னை யறிவித்த தழிவில் யாக்கை
நடுங்கினை போலச் சாலத் தளர்ந்தனை கலுழ னண்ணப்
படங்குறை யாவ மொத்தா யுற்றது பகர்தி யென்றான் (2)

### இந்திரசித்து சொல்வது

சூழ்வினை மாயை யெல்லா மும்பியே துடைக்கச் சுற்றி
வேள்வியைச் சிதைய நூறி வெகுளியா லெழுந்து வீங்கி
ஆள்வினை யாற்றல் தன்னா லமர்த் தொழில் புக்கு நின்றேன்
தாழ்விலாப் படைகள் மூன்றுத் தொடுத்தனென் தடுத்துவிட்டான் (3)

நிலஞ்செஃது விசும்புஞ் செஃது நெடியவன் படை நின்றானை
வலஞ்செஃது போயிற் றென்றால் மற்றினி வலிய துண்டோ
குலஞ்செஃத பாவத்தாலே கொடும்பகை தேடிக் கொண்டோம்
சலஞ்செயி னுலக முன்று மிலக்குவன் முடிப்பன் றானே (4)

முட்டிய செருவின் முன்ன முதலவன் படையை யென்மேல்
விட்டில னுலகை யஞ்சி யாதலால் வென்று மீண்டேன்
கிட்டிய போதுங் காத்தா னின்னமுங் கிளர்ப்பா னல்லன்
சுட்டிய வலியினாலே கோறலைத் துணிந்து நின்றான் (5)

ஆதலா லஞ்சி னேனென் றருளலை யாசை தானச்
சீதைபால் விடுதி யாயி னனையவர் சுற்றந் தீர்வர்
போதலும் புரிவர் செஃத தீமையும் பொறுப்ப ருன்மேல்
காதலா லுரைத்தே னெற்றா னுலகெலாங் கலக்கி வென்றான் (6)

## இராவணன் சினந்து கூறுதல்

இயம்பலு மிலங்கை வேந்த னெயிற்றிள நிலவு தோன்றப்
புயங்களுங் குலுங்க நக்குப் போர்க்கினி யொழிதி போலாம்
மயங்கினை மனிதன் றன்னை யஞ்சினை வருந்த லைய
சயங்கொடு தருவெ னின்றே மனிதரைத் தனுவொன் றாலே (7)

முன்னையோ ரிறந்தோ ரெல்லா மிப்பகை முடிப்ப ரென்றும்
பின்னையோர் நின்றோ ரெல்லாம் வென்றனா பெயர்வ ரென்றும்
உன்னைநீ யவரை வென்று தருதியென் றுணர்ந்து மன்றால்
என்னையே நோக்கி யானிந் நெடுப்பகை தேடிக் கொண்டேன் (8)

பேதைமை யுரைத்தாஃ பிள்ளா யுலகெலாம் பெயரப் பேராக்
காதையென் புகழி னோடு நிலைபெற வமரர் காண
மீதெழு மொக்கு ளன்ன யாக்கையை விடுவ தல்லால்
சீதையை விடுவ துண்டோ விருபது திண்டோளுண்டாக (9)

வென்றிலெ னென்றபோதும் வேதமுள்ளளவும் யானும்
நின்றுள னன்றோ மற்றவ் விராமன்போர் நிற்கு மாயின்
பொன்றுத லொருகா லத்துந் தவிருமோ பொதுமைத் தன்றோ
இன்றுளார் நாளை மாள்வார் புகழுக்கு மிறுதி யுண்டோ (10)

விட்டனென் சீதை தன்னை யென்னலும் விண்ணோர் நண்ணிக்
கட்டுவ தல்லாற் பின்னை யானெனக் கருதுவாரோ
பட்டன னென்றபோது மெளிமையிற் படுகிலான் யான்
எட்டினோ டிரண்டு மான திசைகளை யெறிந்து வென்றேன் (11)

சொல்லியென் பலவு நீநின் னிருக்கையைத் தொடர்ந்து தோளில்
புல்லிய பகழி வாங்கிப் போர்த்தொழிற் சிரமம் போக்கி
எல்லியும் கழித்தி யென்னா வெழுந்தன னெழுந்து பேழ்வாஃ
வல்லிய முனிந்தா லன்னான் வருகதேர் தருக வென்றான் (12)

## இந்திரசித்து போருக்குப் புறப்படுதல்

எழுந்தவன் றன்னை நோக்கி யிணையடி யிறைஞ்சி யெந்தாஃ
ஒழிந்தருள் சீற்றஞ்சொன்ன வுறுதியைப் பொறுத்தி யான்போயக்
கழிந்தனெ னென்ற பின்னர் நல்லவாக் காண்டி யென்னா
மொழிந்துதன் தெஃவத் தேர்மே லேறினான் முடியலுற்றான் (13)

படைக்கலம் விச்சை மற்றும் படைத்தன பலவுந் தன்பால்
அடைக்கல மாகத் தேவ ரளித்தன வெல்லாம் வாங்கிக்
கொடைத்தொழில் வேட்டோர்க் கெல்லாங் கொடுத்தனன் கொடியோன் றன்னைக்
கடைக்கணால் நோக்கி நோக்கி யிருகணீர் கலுழப் போனான் (14)

## மன்னனைக் காக்குமாறு இந்திரசித்து கூறுதல்

இலங்கியி னிருத ரெல்லா மெழுந்தனர் விரைவி னெஃதி
விலங்கலந் தோள நின்னைப் பிரிகலம் விளிது மென்னா
வலங்கொடு தொடர்ந்தார் தம்மை மன்னனைக் காமின் யாதும்
கலங்கலி னின்றே சென்று மனிதரைக் கடப்ப லென்றான் (15)

வணங்குவார் வாழ்த்து வார்தன் வடிவினை நோக்கித் தம்வாஃ
உணங்குவா ருயிர்ப்பா ருள்ள முருகுவார் வெருவ லுற்றுக்
கணங்குழை மகளி ரீண்டி யிரைத்தவர் கடைக்க னென்னும்
அணங்குறை நெடுவேல் பாயு மமர்கடந் தரிதிற் போனான் (16)

ஏயிலா னின்ன னாக விலக்குவ னெடுத்த வில்லான்
சேயிரு விசும்பை நோக்கி வீடண தீயோ னப்பால்
போயின னாதல் வேண்டும் புரிந்தில னொன்று மென்பான்
ஆயிரம் புரவி பூண்ட தேரின்பே ரரவங் கேட்டான் (17)

## இந்திரசித்தின் தேர் வருதல்

குன்றிடை நெரிதர வடவரையின் குவடுருள் குவதென முடுகுதொறும்
பொன்றிணி கொடியின திடியுருமி னதிர் குரன் முரல்வது புனைமணியின்
மின்றிரள் சுடரது கடல்பருகும் வடவனல் வெளியுற வருவதெனச்
சென்றது திசைதிசை யுலகிரியத் திரிபுவ னமுமுறு தனியிரதம் (உவமையணி) (18)

கடன்மறு கிடவுல குலையநெடங் கரியிரி தரவெதிர் கவிகுலமும்
குடன்மறு கிடமலை குலைய நிலங் குழியொடு கிழிபட வழிபடரும்
இடமறு கியபொடி முடுகிடவும் மிருளுள தெனவெழு மிகலரவின்
படமறு கிடவெதர் விரவியதவ் விருள்பக லுறவரு பகையிரதம் (உயர்வுநவிற்சியணி) (19)

## இந்திரசித்தும் இலக்குவனும் பொருதல்

ஆர்த்தது நிருதர்த மனிகமுட னமரரும் வெருவினர் கவிகுலமும்
வேர்த்தது வெருவலொ டலம்வரலால் விடுகணை சிதறின னடுதொழிலோன்
தீர்த்தனு மவனெதிர் முடுகிநெடுந் திசைசெவி டெறிதர விசைகெழுதிண்
போர்த்தொழில் புரிதலு முலகுகடும் புகையொடு சிகையனல் பொதுளியதால் (20)

## வீடணன் இலக்குவனுககு ஆலோசனை கூற அவன் கடும்போர் புரிதல்

வீடண னமலனை விளல்கெழுபோர் விடலையை மினியிடை விடலுளதேல்
சூடலை துறுமலர் வாகையெனத் தொழுதன னவளவி லழகனுமக்
கோடணை வரிசிலை யுலகுலையக் குலவரை பிதிர்பட நிலவரையின்
சேடனும் வெருவுற வுருமுறழ் திண்டெறுகணை முறைமுறை சிதறினனால் (21)

ஆயின வளவையி ணனன்முகவாஃ வடுகணை யவன்விட விவன்விடவத்
தீயினு மெரிவன வுயிர்பருகச் சிதறின கவிகளொ டினநிருதர்
போயின போயின திசை நிறையப் புரள்பவர் முடிவிலர் பொருதிறலோர்
ஏயின ரொருவரை யொருவர்குறித் தெரிகணை சொரிவன விருமழைபோல் (22)

அற்றன வனல்விழி நிருதன்வழங் கடுகணை யிடையிடை யடலரியின்
கொற்றவன் விடுகணை முடிகியவ னுடல்பொதி குருதிகள் பருகினகொண்
டுற்றன வொளிகிளர் கவசநுழைந் துறுகில தெறுகில வனுமனுடல்
புற்றிடை யரவென நுழையநெடும் பொருசர மவனவை யுணர்கிலனால் (23)

ஆயிடை யிளையவன் விடமனையா வைனிடு கவசமு மழிவுபடத்
தூயின னயின்முக விசிகநெடுந தொளைபட விழினயல் சொரிய முனிந்
தேயின நிருதன் தெரிகணைதா னிடனில படுவன் விடையிடைவந்
தோஃவுறு வனவது தெரிவுறலா லுரறின ரிமையை ருவகையினால் (24)

### இந்திரசித்து விட்ட வேலினை இலக்குவன் துணித்தல

வில்லினின் வெல்லுத வரிதெனலால் வெயிலினுமனலுமிழ் அயில்விரைவில்
செல்லென மிடல்கொடு கடவினன்மற் றதுதிகை முகனமக னுதவியதால்
எல்லினும் வெளிபட வெதிர்வதுகண் டிளையவ னெழுவகை முனிவர்கடம்
சொல்லினும் வலியதொர் சுடுகணையா னடுவிரு துணிபட வுரறினனால் (25)

ஆணியி னிலையென விசிக நுழைந் தாயிர முடல்புக வழிபடுசெஞ்
சோணித நிலமுற வுலறிடவுந் தொடுகணை விடுவன மிடல்கெழுதிண்
பாணிகள் கடுகின முடுகிடலும் பகலவன் மருமக னடுகணைவன்
றூணியை யுருமுறழ் பகழிகளாற் றுணிபட முறைமுறை சிதறினான் (26)

### இலக்குவன் இந்திரசித்தின் தேர்ப்பாகனை வீழ்த்தல்

தேருள தெனினிவன் வலிதொலையா னெனுமது தெரிவுற வுணருறுவான்
போருறு புரவிகள் படுகிலவாற் புனைபிணி துணிகில பொருகணையால்
சீரிது பெரிதித னிடையெனத் தெரியவ னொருசுடு தெறுகணையால்
சாரதி மலைபுரை தலையை நெடுந் தரையிடை யிடுதலு நிலைதிரிய (27)

உஃவினை யொருவன் றூண்டா துலத்தலிற் றவத்தை நண்ணி
அஃவினை நலிய நைவா னறிவிற்கு முவமை யாகி
மெஃவினை யமைந்த காமம் விற்கின்ற விரகிற் றோலாப்
பொஃவினை மகளிர் கற்புப் போன்றதப் பொலன்பொற் றிண்டேர் (28)

### இந்திரசித்தின் வீரம்

துள்ளுமாஃ புரவித்தேரு முறைமுறை தானே தூண்டி
அள்ளினன் பறிக்குந் தன்பேராகமே யாவ மாக
வள்ளன்மே லனுமன் றன்மேன் மற்றையோர் மறறிண்டோண்மேல்
உள்ளுறப் பகழிதூவி யார்த்தன னெவரு முட்க (29)

வீரரென் பார்கட் கெல்லா முன்னிற்கும் வீரர் வீரன்
பேரரென் பார்க ளாகும் பெற்றியிப் பெற்றித் தாமே
சூரரென் றுரைங்கற் பாலார் துஞ்சும்போ துணர்விற் சோராத்
தீரரென் றமரர் செப்பிச் சிந்தினார் தெஃவப் பொற்பூ (30)

## இந்திரசித்தின் செயல்கண்டு இலக்குவன் வியத்தல்

எஃதவன் பகழியெல்லாம் பறித்திவ னென்மே லெஃயும்
கஃதடு மாறா துள்ள முயிருங் கலங்கா யாக்கை
மொஃகணை கோடிகோடி மொஃக்கவு மிளைப்பொன் றில்லான்
அஃயனு மிவனோ டெஞ்சு மாண்டொழி லாற்ற லென்றான் (31)

## இவன் பகலில் அல்லால் இறவான் என வீடணன் சொல்லுதல்

தேரினைக் கடாவி வானிற் செல்லினும் செல்லும் செஃயும்
போரினைக் கடந்து மாயம் புணர்க்கினும் புணர்கும் போயக்
காரினைக் கலந்து வஞ்சங் கருதினுங் கருதுங் காண்டி
வீரமெஃப் பகலி னல்லால் விளிகில னிருளின் வெஃயேன் (32)

## இலக்குவன் வெல்வேன் எனல்

என்றெடுத் திலங்கை வேந்தற் கிளைய னியம்ப வின்னே
பொன்றுவ தில்லா லப்பா லினியொரு போக்க முண்டோ
சென்றுழிச் செல்லு மன்றே தெறுகணை வலியிற் றீர்ந்தான்
வென்றியிப் பொழுதே போடுங் காணென விளம்பு மெல்லை (33)

## கதிரவன் தோற்றம்

செம்புனற் சோரிச் செக்கர் திசையுறச் செறிகை யாலும்
அம்பென வுற்ற கொற்றத் தாயிரங் கதிர்களாலும்
வெம்புபொற் றேரிற் றோன்றுஞ் சிறப்பினு மரக்கன் வெஃயோன்
உம்பரிற் செல்கின் றானொத் துதித்தன னருக்க னுப்பால் (34)

## இந்திரசித்தின் வரம்

ஆரழி யாத சூலத் தண்ணற னருளி னீந்த
தேரழி யாத போதுஞ் சிலைகரத் திருந்த போதும்
போரழி யானிவ் வெஃயோன் புகழழி யாத பொற்றோள்
வீரவி தாணை யென்றான் வீடணன் விளைவ தோர்வான் (35)

**இலக்குவன் கடையாணியை நீக்கித் தேரைப் பிரித்தல்**

பச்சைவெம் புரவி வீயா பல்லியற் சில்லி பாரின்
நிச்சய மற்று நீங்கா வென்பது நினைந்து வில்லின்
விச்சையின் கணவனானான் வின்மையால் வயிர மிட்ட
அச்சினோ டாழி வெற்வே றாக்கினா னாணி நீக்கி (36)

மணிநெடுந் தேரின் கட்டு விட்டது மறித லோடும்
அணிநெடும் புரவி யெல்லா மாற்றல் வாய வன்றே
திணிநெடு மரமொன் றாழி வாண்மழுத் தாக்க சிந்திப்
பணைநெடு முதலு நீங்கப் பாங்குறு புணவை போல (37)

**இந்திரசித்து விண்மிசைச் சென்று மறைந்து ஆரவாரித்தல்**

அழிந்ததேர்த் தட்டி னின்று மங்குள்ள படையை யள்ளிப்
பொழிந்தன னிளைய வள்ளல் கணைகளாற் றுணித்துப் போக்க
மொழிந்ததோ ரளவின் விண்ணை முட்டினா னுலக மூன்றும்
கழிந்தன வென்ன வார்த்தான் கண்டில ரோசை கேட்டார் (38)

**இந்திரசித்து சொரிந்த கல்மாரியால் வானரர் அழிதல்**

மல்லின்மா மாரியன்ன தோளினான் மழையின் வாஃத்த
கல்லின்மா மாரிபெற்ற வரத்தினாற் சொரியுங் காலைச்
செல்லும் வான் றிசைக னோரார் சிரத்தினோ டுடல்கள் சிந்திப்
புல்லினார் நிலத்தை நின்ற வாரை வீரர் போகார் (39)

**இலக்குவன் விண்ணை நோக்கி அம்புகளை எஃதல்**

காண்கிலன் கல்லின் மாரியல்லது காளை வீரன்
கேண்கலந் தொளித்து நின்ற செஃகையாற் றிசை களெங்கும்
மாண்கலந் தளந்த மாயன் வடிவென முழுதும் வெளவை
ஏண்கலந் தமைந்த வாளி யேவினா னிடைவிடாமல் (40)

**இந்திரசித்து மேகக் கூட்டத்தினிடையே காணப்படுதல்**

மறைந்தன திசைக ளெங்கு மாறுபோஃ மலையு மாற்றல்
குறைந்தன னிருண்ட மேகக் குழாத்திடைக் குருதி கொண்மூ

உறைந்துள தென்ன நின்றா னுருவினை யுலக மெல்லாம்
நிறைந்தவன் கண்டான் காணா வினையதோர் நினைப்ப னானான் (41)

**இலக்குவன் இந்திரசித்தின் கையைக் கொ்ஃதல்**

சிலையறா தெனினு மற்றத் திண்ணியோன் றிரண்ட தோளாம்
மலையறா தொழீயா தென்னா வரிசிலை யொன்று வாங்கிக்
கலையறாத் திங்க ளன்ன வாளியாற் கையைக் கொஃதான்
விலையறா மணிப்பூ ணோடும் வில்லொடு நிலத்து வீழ (42)

**இந்திரசித்தின் கை அற்றுத் தரையில் வீழ்தல்**

பாகவான் பிறைபோல் வெவ்வாஃச் சுடுகணை படுத லோடும்
மாகவான் தடக்கை மண்மேல் விழுந்தது மணிப்பூண் மின்ன
வேகவான் கடுங்கா லெற்ற டுற்றும்போஃ விளியு நாளின்
மேகமோ காயத்திட்ட வில்லிலாடும் வீழ்ந்த தென்ன (43)

**துண்டிக்கப்பட்ட கை தரையில் விழுந்து துடித்தல்**

படித்தலஞ் சுமந்த நாகம் பாகவான் பிறையைப் பற்றிக்
கடித்தது போலக் கோல விரல்களா லிறுகக் கட்டிப்
பிடித்தவெஞ் சிலையி னோடும் பேரெழில் வீரன் பொற்றோள்
துடித்தது மரமுங் கல்லுந் துகள்பட குரங்குத் துஞ்ச (44)

**தேவர்கள் வியப்பு**

அந்தர மதனி னின்ற வானவ ரருக்கன் வீழா
சந்திரன் வீழா மேரு மால்வரை தகர்ந்து வீழா
இநதிர சித்தின்பொற்றோ ளிற்றிடை வீழ்ந்த தென்றால்
எந்திர மனைய வாழ்க்கை யினிச்சில ருகந்தெ னென்றார் (45)

**அரக்கர் கலங்குதல்**

மொஃயற முர்த்தியன்ன மொஃம்பினா னம்பி னாலப்
பொஃயறச் சிறிதென் றென்னும் பெருமையான் புதல்வன் பூத்த
மஃயறக் கரிதென் றெண்ணு மனத்தினான் வயிர மன்ன
கஃயறத் தலையற் றார்போல் கலங்கனிரார் நிருதர் கண்டார் (46)

காலங்கொண டெழுந்த மேகக் கருமையான் செம்மை காட்டும்
ஆலங்கொண் டிருண்ட கண்டத் தமரர்கோ னருளிற் பெற்ற
சூலங்கொண் டெறிவ லென்று தோன்றினான் பகையிற் றோற்ற
மூலங்கொண டுணரா நின்னை முடித்தன்றி முடியே னென்றான். (47)

### இலக்குவன் இந்திரசித்தைக் கொல்லல்

காற்றென யுருமே றென்னக் கனலெனக் கடைநா ளூற்ற
கூ.ற்றமோர் சூலங் கொண்டு குறுகிய தென்னக் கொல்வான்
தோற்றினா னதனைக் காணா வினித்தலை துணிக்குங் காலம்
ஏற்றதென் றயோத்தி வேந்தற் கிளையவ னினைய செஃதான் (48)

மறைகளே தேறத் தக்க வேதியர் வணங்கற் பால
இறையவ னிராம னென்னு நல்லற மூர்த்தி யென்னின்
பிறையெயிற் றிவனைக் கோறி யென்றொரு பிறைவாஃ வாளி
நிறையுற வாங்கி விட்டா னுலகெலா நிறுத்தி நின்றான் (49)

நேமியுங் குலிச வேலு நெற்றியி னெருப்புக் கண்ணான்
நாமவே றானு மற்றை நான்முகன் படையு நாணத்
தீமுகங் கதுவ வோடிச் சென்றவன் சிரத்தைத் தள்ளிப்
பூமழை யமரர் சிந்தப் பொலிந்ததப் பகழிப் புத்தேள் (50)

அற்றவன் தலைமீ தோங்கி யண்டமுற் றாணுகா முன்னம்
பற்றிய சூலத் தோடு முடனிறை பகழி யோடும்
எற்றிய காலக் காற்றான் மின்னொடு மிடியி னோடும்
சுற்றிய புயல்வீழ்ந் தென்ன வீழ்ந்தது சோரன் யாக்கை (51)

விண்டலத் திலங்கு திங்க ளிரண்டொடு மின்னு வீசும்
குண்டலத் துணைக ளோடுங் கொந்தளக் குஞ்சிச் செங்கேழ்ச்
சுண்டவெங் கதிரின் கற்றைத் தழையொடு மிரவி தானிம்
மண்டலம் வீழ்ந்த தென்ன வீழ்ந்தது தலையு மண்மேல் (52)

உயிர்புறத் துற்ற காலை யுண்ணின்ற வுணர்வி னோடும்
செயிரறு பொறியு மந்தக் கரணமுஞ் சிந்து மாபோல்
அயிலெயிற் றரக்க ருள்ளா ராற்றல் ராகி யான்ற
வெயிலுடை யிலங்கை நோக்கி யிரிந்தனர் படையும் விட்டார் (53)

### அங்கதன் இந்திரசித்தின் தலையை முன்தூக்கிச் செல்லுதல்

ஆக்கையி னின்று வீழ்ந்த வரக்கன் நன்றலையை யங்கை
தூக்கின னுள்ளங் கூர்ந்த வாலிசேம் தூது செல்ல
மேக்குயர்ந் தமரர் வெள்ள மள்ளியே தொடர்ந்து வீசும்
பூக்கிளர் பந்தர் நீழ லனுமன்மே லிளவல் போனான் (54)

### இந்திரசித்தின் தலையை இராமபிரான் திருவடியில் வைத்தல்

விழிந்திழி கண்ணி னீரு முவகையுங் களிப்பும் வீங்க
எழுந்தெதிர் வந்த வீர னிணையடி முன்ன ரிட்டான்
கொழுந்தெழுஞ் செக்கர்க் கற்றை வெயில்விட வெயிற்றின்கூட்டம்
அழுந்துற மடிந்த பேழ்வாஃத் தலையடி யுறையொன் றாக (55)

தலையினை நோக்குந் தம்பி கொற்றவை தழீஇய பொற்றோள்
மலையினை நோக்கு நின்ற மாருதி வலியை நோக்கும்
சிலையினை நோக்குந் தேவர் செஃகையை நோக்குஞ் செஃத
கொலையினை நோக்கு மொன்று முரைத்திலன் களிப்புக் கொண்டான் (56)

### தம்பியை இராமபிரான் பாராட்டுதல்

காள மேகத்தைச் செக்கர் கலந்தெனக் கரிய குன்றின்
நாள்வெயிற் பரந்த தென்ன நம்பிதன் றம்பி மார்பில்
தோளின்மே லுதிரச் செங்கேழ்ச் சுவடுதன் னுருவிற் றோன்றத்
தாளின்மேல் வணங்கி னானைத் தழுவினன் தனித்தொன் றில்லான் (57)

கம்ப மதத்துக் களியானைக் காவுற் சனகன் பெற்றெடுத்த
கொம்பு மென்பா லினிவந்து குறுகி னாளென் றகங்குளிர்ந்தேன்
வம்பு செறிந்த மலர்க்கோயில் மறையோன் படைத்த மாநிலத்தில்
தம்பி யுடையான் பகையஞ்சா னென்று மாற்றந் தந்தனையால் (58)

தூக்கிய தூணி வாங்கித் தோளொடு மார்பைச் சுற்றி
வீக்கிய கவச பாச மொழித்தது விரைவி னீக்கித்
தாக்கிய பகழிக் கூர்வாஃ தடிந்தபுண் டழும்பு மின்றிப்
போக்கினன் றழுவிப் பல்காற் பொற்றடந் தோளி னொற்றி (59)

**வீடணன் உதவியை இராமபிரான் புகழ்தல்**

ஆடவர் திலக நின்னா லன்றிக லனும னென்னுஞ்
சேடனா லன்று வேறோர் தெஃவத்தின் சிறப்பு மன்று
வீடணன் தந்த வென்றி யீதென விளம்பி மெஃமை
ஏடவி ழலங்கன் மார்ப னிருந்தன னினித னிப்பால் (60)

# பெரிய புராணம்

செயற்கருஞ் செயல்களைச் செஃத சிவனடியார்களின் வரலாற்றைக் கூறும் நூலாதலின் இந்நூல் பெரிய புராணம் எனறு பெயர் பெற்றது. இதனை இயற்றியவர் சேக்கிழார். இந்நூலுக்கு ஆசிரியர் இட்ட பெயர் 'திருத்தொண்டர் புராணம்' என்பதாகும்.

பெரிய புராணம் சைவ சமயத்தைப பற்றிய உண்மைகளை நன்கு அறிவதற்கு ஏற்ற நூல்களில் மிகச் சிறந்ததாஃ ஒளிர்கின்றது; இனிய எளிய நடையும, கவிச்சுவையும், கற்பனை நயமும் நிரம்பியது. அன்பின் வழி இறைவனை எளிதில் அடையலாம் என்பதனை இனிது எடுத்தியம்புவது. பல்வேறு இனங்களைச் சேர்ந்த அடியார்களையும் ஒத்த நிலையில் கண்டு அவர்தம் திருத்தொண்டின் திறத்தினை முறைப்படக் கூறும் தீந்தமிழ்ப் பனுவலாகச் சேக்கிழார் இயற்றிய பெரியபுராணம் நின்று நிலவுகின்றது. இடைக்காலத் தமிழர் பண்பாட்டினை இனிய எளிய முறையில் எடுத்தியம்பும் நூல் இஃதெனலாம்.

சேக்கிழார் தொண்டை நாட்டில் புலியூர்க்கோட்டத்துக் குன்றத்தூரினில் அநபாய சோழனின் அமைச்சராஃத் துலங்கியவர். இவர்தம் இயற்பெயர் அருண்மொழித் தேவர் என்றும், குடிப்பெயர் சேக்கிழார் என்றும் கூறுவர். இவருடைய காலம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். இவரது புலமைத் திறத்தை வியந்து குலோத்துங்கன் உத்தமச் சோழ பல்லவன் என்ற பட்டப்பெயரைச் சூட்டினான். சேக்கிழார் பற்றியும் இவர் புராணம் பாடிய வரலாறு பற்றியும் உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய சேக்கிழார் புராணத்தில் விரிவாக அறியலாம்.

## மெஃப்பொருள் நாயனார் புராணம் – அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

## சிவ பக்தர்களுக்குப் பொருள் கொடுத்து வரல்

சேதிநன் னாட்டு நீடு திருக்கோவ லூரின் மன்னி
மாதொரு பாகர் அன்பின் வழிவரு மலாடர் கோமான்
வேதநன் னெறியின் வாஃமை விளங்கிட மேன்மை பூண்டு
காதலால் ஈசர்க்கன்பர் கருத்தறிந் தேவல் செஃவார் (1)

அரசியல் நெறியின் வந்த அறநெறி வாழாமல் காத்து
வரைநெடுந் தோளால் வென்று மாற்றலர் முனைகள் மாற்றி
உரைதிறம் பாத நீதி ஓங்குநீர் மையினின் மிக்கார்
திரைசெஃநீர்ச் சடையான் அன்பர் வேடமே சிந்தை செஃவார் (2)

மங்கையைப் பாக மாக உடையவர் மன்னுங் கோவில்
எங்கணும் பூசை நீடி ஏழிசைப் பாடல் ஆடல்

பொங்கிய சிறப்பின் மல்கப் போற்றுதல் புரிந்து வாழ்வார்
தங்கள் நா யகருக் கன்பா தாளலால சார்பொன் றில்லார். (3)

தேடிய மாடு நீடு செல்வமும் தில்லை மன்றுள்
ஆடிய பெருமான் அன்பர்க் காவன ஆகும் என்று
நாடிய மனத்தி னோடு நாயன்மார் அணைந்த போது
கூடிய மகிழ்ச்சி பொங்கக் குறைவறக் கொடுத்து வந்தார் (4)

## முத்தநாதன் அரண்மனை உட்புகல்

இன்னவா றொழுகும் நாளில் இகல்திறம் புரிந்தோர் மன்னன்
அன்னவர் தம்மை வெல்லும் ஆசையால் அமர்மேற்கொண்டு
பொன்னணி ஓடை யானைப் பொருபரி காலாள் மற்றும்
பன்முறை இழந்து தோற்றுப் பரிபவப் பட்டுப் போனான் (5)

இப்படி இழந்த மாற்றான் இகலினால் வெல்ல மாட்டான்
மெஃப்பொருள் வேந்தன்சீலம் அறிந்துவெண்ணீறு சாத்தும்
அப்பெரு வேடம் கொண்டே அற்றத்தில் வெல்வா னாகச்
செப்பரு நிலைமை எண்ணித் திருக்கோவ லூரிற் சேர்வான் (6)

மெஃயெலாம் நீறு பூசி வேணிகள் முடித்துக் கட்டிக்
கையினிற் படைக ரந்த புத்தகக் கவளி ஏந்தி
மைபொதி விளக்கே என்ன மனத்தினுட் கறுப்பு வைத்துப்
பொஃத்தவ வேடம் கொண்டு புகுந்தனன் முத்தநாதன் (7)

மாதவ வேடம் கொண்ட வன்கணான் மாடம் தோறும்
கோதைசூழ் அளக பாரக் குழைக்கொடி ஆட மீது
சோதிவெண் கொடிகள் ஆடும் சுடர்நெடு மறுகிற் போகிச்
சேதியர் பெருமான் கோயில் திருமணி வாயில் சேர்ந்தான் (8)

கடையுடைக் காவ லாளர் கைதொழு தேற நின்றே
“உடையவர் தாமேவந்தார் உள்ளெழுந் தருளும்” என்னத்
தடைபல புக்க பின்பு தனித்தடை நின்ற தத்தன்
“இடைதெரிந் தருள வேண்டும் துயில்கொளும் இறைவன்” என்றான் (9)

என்றவன் கூறக் கேட்டே “யான் அவற் குறுதி கூற
நின்றிடு நீயும்” என்றே அவனையும் நீக்கிப் புக்குப்

பொதன்திகழ் பள்ளிக் கட்டில் புரவலன் துயில மாடே
மன்றலங் குழல்மென் சாயல் மாதேவி இருப்பக் கண்டான் (10)

## அரண்மனையில் நிகழ்ந்தன

கண்டுசென் றணையும் போது கதுமென இழிந்து தேவி
வண்டலர் மாலை யானை எழுப்பிட உணர்ந்து மன்னன்
"அண்டர்நா யகனார் தொண்டராம்" எனக்குவித்த செங்கை
கொண்டெழுந் தெதிரே சென்று கொள்கையின் வணங்கி நின்று (11)

"மங்கலம் பெருக மற்றென் வாழ்வுவந் தணைந்த தென்ன
இங்கெழுந் தருளப் பெற்ற தென் கொலோ ?" என்று கூற
"உங்கள்நா யகனார் முன்னம் உரைத்த ஆகமநூல் மண்மேல்
எங்குமில் லாத தொன்று கொடுவந்தேன் இயம்ப" என்றான் (12)

"பேறெனக் கிதன்மேல் உண்டோ ? பிரான் அருள் செஃத இந்த
மாறிலா கமத்தை வாசித் தருள்செய வேண்டும்" என்ன
"நாறுபூங் கோதை மாது தவிரவே நானும் நீயும்
வேறிடத் திருக்க வேண்டும்" என்றவன் விளம்ப, வேந்தன் (13)

திருமகள் என்ன நின்ற தேவியார் தம்மை நோக்கிப்
பரிவுடன் விரைய அந்தப் புரத்திடைப் போக ஏவித்
தருதவ வேடத் தானைத் தவிசின்மேல் இருத்தித் தாமும்
இருநிலத் திருந்து போற்றி இனியருள் செஃயும்" என்றான் (14)

கைத்தலத் திருந்த வஞ்சக் கவளிகை மடிமேல் வைத்துப்
புத்தகம் அவிழ்ப்பான் போன்று புரிந்தவர் வணங்கும் போதில்
பத்திரம் வாங்கித் தான்முன் நினைந்த அப்பரிசே செஃய
"மெஃத்தவ வேட மேமெஃப் பொருள்" எனத் தொழுதுவென்றார் (15)

## மெஃப்பொருள் நாயனாரின் பக்தி

மறைத்தவன் புகுந்த  போதே மனம் அங்கு வைத்த தத்தன்
இறைப்பொழு தின்கட் கூடி வாளினால் எறிய லுற்றான்
நிறைத்த செங் குருதி சோர வீழ்கின்றார் நீண்ட கையால்
தறைப்படும் அளவில் "தத்தா நமர்" எனத் தடுத்து வீழ்ந்தார் (16)

வேதனை எஃதி வீழ்ந்த வேந்தரால் விலக்கப்பட்ட
தாதனாந் தத்தன் தானும் தலையினால் வணங்கித் தாங்கி
“யாதுநான் செஃகேன் ?” என்ன எம்பிரான் அடியார்போக
மீதிடை விலக்கா வண்ணம் கொண்டுபோஃவிடு நீ” என்றார் (17)

அத்திறம் அறிந்தார் எல்லாம் “அரசனைத் தீங்கு செஃத
பொஃத்தவன் தன்னைக் கொல்வோம்” எனப்புடை சூழ்ந்த போது
தத்தனும் அவரை எல்லாம் தடுத்துடன் கொண்டு போவான்
“இத்தவன் போகப் பெற்ற திறைவன தாணை” என்றான் (18)

அவ்வழி அவர்கள் எல்லாம் அஞ்சியே அகன்று நீங்கச்
செவ்விய நெறியில் தத்தன் திருநகர் கடந்து போந்து
கைவடி நெடவாள் ஏந்தி ஆளுறாக் கானஞ் சேர
வெவ்வினைக் கொடியோன் தன்னை விட்டபின் மீண்டுபோந்தான் (19)

மற்றவன் கொண்டு போன வஞ்சனை வேடத் தான்மேற்
செற்றவர் தம்மை நீக்கித் தீதிலா நெறியின் விட்ட
சொற்றிறம் கேட்க வேண்டிச் சோர்கின்ற ஆவி தாங்கும்
கொற்றவன் முன்பு சென்றான் கோமகன் குறிப்பில் நின்றான் (20)

சென்றடி வணங்கி நின்று “செஃதவ வேடம் கொண்டு
வென்றவற் கிடையூ றின்றி விட்டனன்” என்று கூற
“இன்றெனக்கு ஐயன் செஃத தியார்செஃய வல்லார் ?” என்று
நின்றவன் தன்னை நோக்கி நிறைபெரும் கருணை கூர்ந்தார் (21)

அரசியல் ஆயத் தார்க்கும் அழிவுறும் காத லார்க்கும்
விரவிய செஃகை தன்னை விளம்புவார் “விதியினாலே
பரவிய திருநீற் றன்பு பாதுகாத் துஃப்பீர்” என்று
புரவலர் மன்று ளாடும் பூங்கழல் சிந்தை செஃதார் (22)

தொண்டனார்க்கு இமயப்பாவை துணைவனார் அவர்முன் தம்மைக்
கண்டவா றெதிரே நின்று காட்சிதந் தருளி மிக்க
அண்டவா னவர்கட் கெட்டா அருட்கழல் நீழல் சேரக்
கொண்டவா றிடைய றாமல் கும்பிடும் கொள்கை ஈந்தார் (23)

இன்னுயிர் செகுக்கக் கண்டும் எம்பிராலன் அன்பர் என்றே
நன்நெறி காத்த சேதி நாதனார் பெருமை தன்னில்
என்னுரை செஃதே னாக இதகல்விறன் மிண்டர் பொற்றாள்
சென்னிவைத் தவர்முன் செஃத திருத்தொண்டு செப்ப லுற்றேன் (24)

# பாரதியார் பல்கலைக்கழகம், கோவை – 641 046

## மூன்றாம் பருவம் தமிழ் – தாள் II

### (2007–2008ஆம் கல்வியாண்டில் சேர்வோர்க்குரியது

### வினாத்தாள் அமைப்பு

**நேரம் : 3 மணி** **மதிப்பெண்கள் : 100**

பிரிவு அ : ஒருசொல் அல்லது தொடரில் விடை எழுதுக (10 x 1 x 10)

ஒவ்வொரு அலகிலிருந்தும் இரண்டு வினாக்கள்

பிரிவு ஆ : இரண்டு பக்க அளவில் விடை எழுதுக (5 x 6 x 30)

செஃயுள் : 2 வினாக்கள்

புதினம் : 1 வினா

இலக்கணம் : 1 வினா

இலக்கிய வரலாறு : 1 வினா

பிரிவு இ : கட்டுரை அளவில் விடை எழுதுக (5 x 12 x 60)

செஃயுள் : 2 வினாக்கள்

புதினம் : 1 வினா

இலக்கிய வரலாறு : 1 வினா

பொதுக்கட்டுரை : 1 வினா

குறிப்பு : ஆ, இ, பிரிவுகளில் வினாக்கள் ‘இது’ அல்லது ‘அது’ என்ற வகையில் அவ்வற்றிற்குரிய அலகுகளிலிருந்து அமைய வேண்டும்.

# பாரதியார் பல்கலைக்கழகம், கோவை – 641 046

## மூன்றாம் பருவம் தமிழ் – தாள் III

**(செஃயுள், புதினம், இலக்கணம், இலக்கிய வரலாறு, பயிற்சிக்கட்டுரை)**

**(2007–2008ஆம் கல்வியாண்டில் சேர்வோர்க்குரியது**

**வினாத்தாள் அமைப்பு**

**நேரம் : 3 மணி** **மதிப்பெண்கள் : 100**

### பகுதி அ

ஒரு சொல் / தொடரில் விடை எழுதுக (10 x 1 x 10)

1. நோதக வுண்டோ நும் மகனார்க்கு என வினவியவள் யார் ?
2. மணிமேகலை ––––––––––––––––––––,சமயக்காப்பியம் ஆகும் (நிரப்புக)
3. கம்பராமாயணத்திற்குக் கம்பர் இட்ட பெயர் யாது ?
4. ‘தத்தா நமா’ எனத் தடுத்து வீழ்ந்தவர் யார் ?
5. ‘கொள்ளைக்காரர்கள்’ நாவல் எந்த வட்டாரத்தைச் சார்ந்தது ?
6. ‘கொள்ளைக்காரர்கள்’ நாவலில் வரும் கூட்டுறவுச் சங்கத்துத் தலைவன் பெயரைச் சுட்டுக
7. மணிமேகலை – எப்பா வகையைச் சார்ந்தது ?
8. ‘புற்றிடை யரவென நுழைய’ இவ்வரியில் இடம்பெறும் அணி யாது ?
9. தமிழில் தோன்றிய முதல் புதினம் யாரால் எழுதப்பட்டது ?
10. சேக்கிழாரின் இயற்பெயரை எழுதுக

### பகுதி ஆ

இரண்டு பக்க அளவில் விடை எழுதுக (5 x 6 x 30)

11. அ. ஆபுத்திரன் அந்தணர்களுக்குக் கூறியவை யாவை ?

அல்லது

ஆ. சீவனின் தோழர் விசையைத் தேற்றுதல் குறித்து விளக்குக

12. அ. வீடணன் இலக்குவனுக்குக் கூறிய ஆலோசனைகளைத் தொகுத்துத் தருக

அல்லது

ஆ. மெஃப்பொருள் நாயனாரின் பக்தித் திறத்தை எடுத்தியம்புக

13. அ. 'கொள்ளைக்காரர்கள்' நாவலின் கதைப் பின்னலை விளக்குக

அல்லது

ஆ. இராஜம்மையின் பாத்திரப்படைப்பின் வன்மை மென்மைகளைப் புலப்படுத்துக

14. அ. "படித்தலஞ் சுமந்த நாகம் பாகவான் பிறையைப் பற்றிக் கடிந்தது போலக் கோல விரல்களால் இறுகக்கட்டிய பிடித்த கவஞ்சிலையினோடும் பேரெழில் வீரன் பொற்றோர் துடித்தது மரமும் கல்லும் துகள்படக்குரங்கும் துஞ்ச" – இப்பாடலில் இடம்பெற்றுள்ள அணியை விளக்கி வரைக

அல்லது

ஆ. கலிவிருத்தம் – விளக்கம் தருக

15. அ. கம்பர்

அல்லது

ஆ. சேக்கிழார் – திறம் குறித்தெழுதுக

## பகுதி இ

கட்டுரை அளவில் விடை எழுதுக (5 x 12 x 60)

16. அ. கோவலனின் வருத்த உரையும் கண்ணகியின் மறுமொழியும் குறித்தெழுதுக

அல்லது

ஆ. சீவகன் வரலாற்றைக் கேட்டு விசையை அடைந்த துன்பத்தினைப் புலப்படுத்துக

17. அ. இராவணனுக்கும் இந்திரசித்துக்கும் இடையே நடந்த உரையாடலின் சிறப்பினை எடுத்துக்காட்டுக

அல்லது

ஆ. மெஃப்பொருள் நாயனார் புராணம் காட்டும் மனித நேயத்தைக் காட்டுக

18. அ. ‘கொள்ளைக்காரர்கள்’ நாவலின் தலைப்புப் பொருத்தத்தினை விளக்கி எழுதுக

அல்லது

ஆ. கொள்ளைக்காரர்கள் நாவலின் பாத்திரப் படைப்புக் குறித்து ஒரு திறனாஃவுக் கட்டுரை தருக

19. அ. இரட்டைக் காப்பியங்கள் குறித்து இலக்கிய வரலாற்றுக் கட்டுரை எழுதுக

அல்லது

ஆ. புதினத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துக் கட்டுரை வரைக

20. அ. ‘பெண்ணுரிமை’ என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக

அல்லது

ஆ. ‘ஊழலை ஒழிப்பதில் இளைஞரின் பங்கு’ என்ற தலைப்பில் பொதுக் கட்டுரை தருக